## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.

**O.S No.124/2016** **Date:09.06.2023**
**(P.W– 1)**

திரு.கணேசன் த/பெ.துரைசாமி
**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. வழக்கு போட்டுள்ள தாவாவின் காலை எண். என்ன என்றால், 274/1பி 1ஏ 1ஏ ஆகும். நான் வழக்கு போடும்போது மேற்கண்ட காலை உட்பிரிவு ஆகி உள்ளதா என்று கேட்டால், 353/5 என உட்பிரிவு ஆகியுள்ளது. மேற்படி சொத்தை தான் நான் அனுபவித்து வருகிறேன் என்றால், சரிதான். என் சொத்திற்கு கிழபுறமாக தென் வடல் சந்து உள்ளது என்றால், சரிதான். சொத்திற்கு மேபுறம் தென்வடல் திருப்பூர் to குன்னத்தூர் ரோடு உள்ளது என்றால், சரிதான். தென்புறமாக 353/5 காலையின் ஒரு பகுதி சௌந்திரராஜனுக்கு பாத்தியப்பட்டது.

2. வா.சா.ஆ.1 ஆவணம் 2014ல் பாகப்பாத்திய விடுதலைப் பத்திரமாகும். அதில் புல எண் 353/3ல் கூட்டுதட பாத்தியம் என்று உள்ளது என்றால், சரிதான். மேற்படி தடம் அவிநாசி – ஈரோடு ரோட்டிலிருந்து தெற்கு நோக்கி வந்து கிழக்கு நோக்கி செல்கிறது என்றால், சரிதான். மேற்படி தடம் 353/5க்கு கிழப்புறத்தில் உள்ள தடத்தை சென்றடைகிறது என்றால், சரியல்ல. மேற்படி தடம் 353/5 எண் காலையில் உள்ள வீட்டிற்கு செல்ல விடப்பட்டுள்ளது.

3. 353/3ல் வரும் தடம் 353/5க்கு கிழபுறத்தில் உள்ள தென்பவடல் தடத்திற்கு சென்றடைகிறது என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், முனியப்ப முதலியாருக்கு பாத்தியப்பட்டது. வா.சா.ஆ.6 அடமான ஆவணத்தில் உள்ள சொத்து விவரம் தென்வடல் ரோட்டுக்கு கிழக்கு முத்துசாமி முதலியார் காஸ்து இடத்துக்கு தெற்கு தென்வடல் சந்துக்கு மேற்கு நாட்டாமை முதலியார் பங்குக்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி செக்கு பந்திக்கு உட்பட்ட சொத்தை தான் நான் அனுபவித்து வருகிறேன் என்றால், சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலுமே மேற்படி உள்ள செக்கு பந்தி இல்லை என்றும், நான் மாற்றி எழுதி உள்ளேன் என்றால், சரியல்ல. நான் தற்போது சொத்துக்களை 2014ம் வருட பாகப்பாத்திய விடுதலைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண் அடிப்படையில் தான் அனுபவித்து வருகிறேன் என்றால், சரிதான். 2014ம் வருட பாகப்பாத்திய விடுதலைப்

பத்திரத்தில் உள்ள செக்கு பந்தியும் 1939 வருட வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள செக்கு பந்தியும் வேறுபட்டு உள்ளது என்று சொன்னால், சரியல்ல.

5. 1993ல் என் அப்பா துரைசாமி மாவட்ட உரிமையில் நீதிமன்றம், திருப்பூரில் அசல் வழக்கு எண்.84/93 தாக்கல் செய்துள்ள விவரம் தெரியும். அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால், தெரியாது. தள்ளுபடியான விவரம் எனக்கு தெரியும் என்றும், நான் வழக்கிற்க்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதியும் அவர் தந்தை சுப்பிரமணியும், முத்துசாமி கவுண்டருக்கும் ஊழியம் செய்து வந்ததாக சொல்வது தவறு என்றால், சரியல்ல.

6. 1ம் பிரதிவாதிக்கும் அவர் தகப்பனாருக்கும் முத்துசாமி கவுண்டர் தனக்கு வேலை செய்வதற்கு வசதியாக அவர்க்ளுக்கு தனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் இடம் கொடுத்துள்ளார் என்பது தவறு என்றால், சரியல்ல. என் தகப்பனார் பிரதிவாதிகளுக்கு அனுமதித்துள்ளார் என்று கூறுவது தவறு என்றால், சரியல்ல. 353/5க்கு வடபுறமாக இருப்பது 353/2 காலை என்றால், சரிதான். காலை 353/2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ளார்கள் என்று சொல்வது பொய் என்றால், சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தாமாக நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்று தாவா சொத்தை காட்டவில்லை என்றால், சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.